**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திட்டக்குடி,**

**முன்னிலை: திருமதி.B.ஹரிணிபிரியா,** B.A., L.L.B.,(Hons)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி , திட்டக்குடி.

***2025 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21ஆம் நாள் சனி கிழமை***

***அசல் வழக்கு எண். 67/2009.ல்***

***வழக்கிடை மனு எண்.196/2024***

1.சுப்ரமணியன்
2.குணசீலன் ... மனுதாரர்கள்/வாதிகள்

.. எதிர் ..

பரமசிவம்
... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது 30.04.2024 ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு 15.06.2024ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டது. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.பாலசந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.இ.ராம.விஸ்வேஸ்வரன் அவர்கள் முன்னிலையாகியும், இம்மனு 18.06.2025ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனு, எதிருரை மற்றும் இருதரப்பு வாதங்கள் ஆகியன பரிசீலனை செய்தும், இதுநாள் வரை என் சீரிய ஆய்விலிருந்து வரும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

**உத்தரவு**

கடந்த 16.04.2024ஆம் தேதியில் தள்ளுபடியான இவ்வழக்கை மீண்டும் கோப்பில் எடுத்து எதிர்மனுதாரர்/எதிர்வாதியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து உத்திரவாக வேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறை தொகுப்பு சட்டத்தின் வகுமுறை 9 விதி 9ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

## 2. மனுவின் சுருக்கம்

2.1 2ம் மனுதாரர்/2ம் வாதி என்றும் 1ம் மனுதாரர்/1ம் வாதி தன் தகப்பனார் என்றும் மேற்படியாருக்காவும் மனுதாரர் தான் வழக்கு நடத்தி வருவதாகவும் வழக்கு விபரம் தனக்கு தெரியும் என்றும், மனுதாரர்கள் எதிர்மனுதாரர்/எதிர்வாதி பேரில் விளம்புகை மற்றும் நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், அவ்வழக்குரையை இதன் ஓர் அங்கமாக கருத வேண்டியுள்ளதாகவும், இவ்வழக்கில் எதிர்மனுதாரர்/எதிர்வாதியை குறுக்கு விசாரணை செய்ய 16.04.2024 தேதியில் வாய்தா வைக்கப்பட்டிருந்தது என்றும் மேற்படி தேதிக்கு ஒரு வாரத்திற்கு முன்பாகவே உடல் நிலை சரியில்லாமல் படுத்த படுக்கையாக இருக்கும் தனது தகப்பனாரான 1ம் மனுதாரரை தான் உடன் இருந்து கவனித்துக்கொள்ள வேண்டியிருந்ததால் தனது வழக்குரைஞரை உடன் காலத்தில் சந்தித்து உரிய விளக்கம் அளிக்க இயலாததாலும், மேற்படி தேதியில் தான் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததாலும் எதிர்மனுதாரர்/எதிர்வாதியை குறுக்கு விசாரணை செய்யாததாலும் தங்களது வழக்குரைஞர் வழக்குரை அதிகாரத்தை ரத்து செய்துவிட்டார்.

2.2 எனவே இந்நீதிமன்றத்தார் தன்னை கூப்பிட்டு தான் ஆஜராகாததாலும், எதிர்மனுதாரர்/எதிர்வாதியை குறுக்கு விசாரணை செய்யாததாலும் மேற்படி 16.04.2024 தேதியில் இவ்வழக்கை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக இப்பால் விசாரிக்கையில் தெரியவந்தது. தான் வேண்டுமென்றோ அலட்சியமாகவோ இருக்கவில்லை. தெய்வாதீனமாக ஏற்பட்ட ஒன்றாகும். எனவே 16.04.2024 தேதியில் தள்ளுபடியான இவ்வழக்கை மீண்டும் கோப்பில் எடுத்து எதிர்மனுதாரர்/எதிர்வாதியை குறுக்கு விசாரனை அனுமதி அளித்து உத்திரவாக வேண்டியது அவசியமும்

நியாயமுமாகின்றது. இல்லையேல் எங்களுக்கு பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும். எங்களுக்கு கூடி வரக்கூடிய நல்ல கட்சியுள்ளது.

2.3 ஆகவே கோர்ட்டார் அவர்கள் அருள்கூர்ந்து மேற்கண்ட காரணங்களினால் 16.04.2024 தேதியில் தள்ளுபடியான இவ்வழக்கை மீண்டும் கோப்பில் எடுத்து எதிர்மனுதாரர்/ எதிர்வாதியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து உத்திரவாக வேண்டியது அவசியமும் நியாயமுமாகின்றது என்று கூறப்பட்டுள்ளது.

**3. எதிருரை சுருக்கம்**

3.1 மனுதாரர்களுக்கு கூடிவரக்கூடிய நல்ல கட்சியில்லாததாலும் இவ்வெதிர்மனுதாரரை வேண்டுமென்றே அலைகழிக்க வேண்டியே இம்மனு, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அக்காரணத்திற்காக இம்மனு தள்ளுபடிக்கருகமானது.

3.2 1ம் மனுதாரர் எந்த மருத்துவமனையில் காண்பித்தார் என்ற விபரத்தினையும், எப்பொழுது உடல்நலம் குணமடைந்தது என்ற விவரத்தினையும் கூறாமலும், மருத்துவசான்றிதழ் எதுவுமில்லாமல் தாக்கல் செய்தள்ள இம்மனு தள்ளுபடிக்கருகமானது. அவ்வகையில் இம்மனு தவறான விவரங்களுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவரும்.

4. இருதரப்பு வாதங்கள் கேட்டக்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.**

5.1 மனுதாரர் தரப்பு வாதம் என்னவெனில் அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/ எதிர்வாதியை குறுக்கு விசாரணை செய்ய 16.04.2024 தேதியில் வாய்தா வைக்கப்பட்டிருந்தது என்றும் மேற்படி தேதிக்கு ஒரு வாரத்திற்கு முன்பாகவே உடல் நிலை சரியில்லாமல் படுத்த படுக்கையாக இருக்கும் தனது தகப்பனாரான 1ம்

மனுதாரரை தான் உடன் இருந்து கவனித்துக்கொள்ள வேண்டியிருந்ததால் தனது வழக்குரைஞரை உடன் காலத்தில் சந்தித்து உரிய விளக்கம் அளிக்க இயலாததாலும், மேற்படி தேதியில் தான் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததாலும் எதிர்மனுதாரர்/ எதிர்வாதியை குறுக்கு விசாரணை செய்யாததாலும் தங்களது வழக்குரைஞர் வழக்குரை அதிகாரத்தை ரத்து செய்துவிட்டார் என்றும் எனவே இந்நீதிமன்றத்தார் தன்னை கூப்பிட்டு தான் ஆஜராகாததாலும், எதிர்மனுதாரர்/எதிர்வாதியை குறுக்கு விசாரணை செய்யாததாலும் மேற்படி 16.04.2024 தேதியில் இவ்வழக்கை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக இப்பால் விசாரிக்கையில் தெரியவந்தது. தான் வேண்டுமென்றோ அலட்சியமாகவோ இருக்கவில்லை. தெய்வாதீனமாக ஏற்பட்ட ஒன்றாகும் என்றும் வாதிடப்பட்டுள்ளது.

**5.2** எதிர்மனுதார்கள் தரப்பு வாதம் என்னவெனில் 1ம் மனுதாரர் எந்த மருத்துவமனையில் காண்பித்தார் என்ற விபரத்தினையும், எப்பொழுது உடல்நலம் குணமடைந்தது என்ற விவரத்தினையும் கூறாமலும், மருத்துவசான்றிதழ் எதுவுமில்லாமல் தாக்கல் செய்தள்ள இம்மனு தள்ளுபடிக்கருகமானது என்று வாதிடப்பட்டுள்ளது.

**5.3** இந்நிலையில் ஆவணங்களை பரிசீலிக்கையில் அசல் வழக்கில் வாதியானவர் எதிர்வாதியை குறுக்கு விசாரணை செய்ய 16.04.2024ஆம் தேதியில் இருந்து அவர் வருகையின்மை காரணமாக தள்ளுபடிச் செய்யப்பட்ட நிலையில், அசல் வழக்கினை மீண்டும் கோப்பிற்கு எடுக்க இம்மனுவினை கடந்த 30.04.2024ஆம் தேதியில் தாக்கல் செய்திருப்பது தெரியவந்தது. மேலும் ஒரு வாரத்திற்கு முன்பாகவே உடல் நிலை சரியில்லாமல் படுத்த படுக்கையாக இருக்கும் தனது தகப்பனாரான 1ம் மனுதாரரை தான் உடன் இருந்து கவனித்துக்கொள்ள வேண்டியிருந்ததால் தனது வழக்குரைஞரை

உடன் காலத்தில் சந்தித்து உரிய விளக்கம் அளிக்க இயலவில்லை என்று மனுதாரர் தரப்பில் கூறியுள்ள காரணம் ஏற்க கூடியதாகவே உள்ளது.

5.4 எனவே மனுதாரர்களுக்கு தமது வழக்கை எடுத்துரைக்க வாய்பளித்து விசாரித்து சாட்சியம் மற்றும் சட்டத்தின் அடிப்படையில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்பதாலும் பன்முகத்தன்மை கொண்ட நடவடிக்கைகள் எழுவதை தடுக்கவும், அதே வேளையில் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள், நேரம் மற்றும் பொருள் விரயத்தை அதற்குரிய செலவுத்தொகை வழங்கி ஈடுகட்டி அசல் வழக்கில் வாதிகளைப் பொருத்து தள்ளுபடிச் செய்யப்பட்ட உத்தரவை நீக்கி வழக்கை மேல்நடத்தும் பட்சத்தில் தான் வழக்கினை திறம்பட தீர்மானிக்க இயலும் என்பதாலும், நீதியின் நலன் கருதி இம்மனுவினை நிபந்தனைகளின் பேரில் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

6. **இறுதியாக**

இம்மனுவின் மனுதாரரானவர் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு வருகின்ற 14.07.2025ஆம் தேதிக்குள்ளோ அல்லது அதற்கு முன்னரோ செலவுத்தொகையாக ரூ.500/- (ரூபாய் ஐநூறு)ஐ நேரடியாக கொடுக்கவேண்டும் என்றும் தவறும்பட்சத்தில் இம்மனு தானாக தள்ளுபடியாகிவிடும் என்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தரிடம் சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 21ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**(ஓம்.B. ஹரிணிபிரியா )**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.

மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை

**(ஓம்.B. ஹரிணிபிரியா )**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திட்டக்குடி,**

**முன்னிலை: திருமதி.B.ஹரிணிபிரியா,** B.A., L.L.B.,(Hons)
*முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி , திட்டக்குடி.*

***2025 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21ஆம் நாள் சனி கிழமை***

***அசல் வழக்கு எண். 67/2009.ல்***

***வழக்கிடை மனு எண்.196/2024***

*1.திட்டக்குடி வட்டம், அடரி மற்றும் அஞ்சல், நடுத்தெருவில் வசிக்கும் கல்வராய சேர்வை குமாரர், சுமார் 67 வயதுள்ள சுப்ரமணியன்*

*2.திட்டக்குடி வட்டம், அடரி மற்றும் அஞ்சலில் வசிக்கும் சுப்ரமணியன் குமாரர் சுமார் 45 வயதுள்ள குணசீலன் ... மனுதாரர்கள்/வாதிகள்*

*.. எதிர் ..*

*திட்டக்குடி வட்டம், அடரி மற்றும் அஞ்சலில் வசிக்கும் பரமசிவம் மகன் சுமார் 65 வயதுள்ள பரமசிவம்*

*... எதிர்மனுதாரர்/பிரதிவாதி*